நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். ( கு.எண்.138)

(பொருள் : நல்ல ஒழுக்கம் எல்லாச் சிறப்புகளுக்கும் அடிப்படை தீய ஒழுக்கம் இடையுறாத துன்பம் தரும். ஒழுக்கம் அறத்தை வளர்க்கும். ஒழுக்கம் இல்லாமை எல்லாப் பாவங்களுக்கும் மூலகாரணம் ஆகும் என்பது கருத்து.

<u>பழனி நகராட்சி</u>

2019–ம் ஆண்டு, ஜூன் மாதம் 26/06/2019–ம் நாள் பிற்பகல் 4.00 மணியளவில் பழனி நகராட்சியில் சாதாரணக் கூட்டம் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெறும்

நகராட்சி அலுவலகம், பழனி.
நாள்.26 –06 –2019

தனி அலுவலர்/ஆணையாளர்
பழனி நகராட்சி

பொருள்கள்

1) நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதம் ந.க.எண். 48800/2006/எல் நாள்....20.....06.2019ல், தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பின் கீழ் புதிய பணியிடங்களை உருவாக்குவது தொடர்பாகவும், அதற்கு ஈடாக சில பணியிடங்களை திரும்ப ஒப்படைப்பது தொடர்பாகவும் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

நகராட்சிகளின் கணக்குகளை இன்றைய தேவைக்கேற்ப பராமரிக்கவும், நிதி மேலாண்மையை திறம்படுத்தவும், **தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி** என்ற பணியமைப்பு உருவாக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சரவர்கள் 1.04.2013 அன்று சட்ட மன்றத்தில் அறிவித்தார் என்றும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணி உருவாக்குவதற்கான தீர்மானங்களை அனைத்து நகராட்சிகளும் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்துள்ளன என்றும், அத்தீர்மானங்கள் 13.06.2013 அன்று அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டன என்றும், இதனடிப்படையில் அரசாணை (எம்எஸ்) எண் 26, நகராட்சி நிர்வாக (ம) குடிநீர் வழங்கல் துறை (எம் இ1) நாள்.10.02.2016ல் தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பிற்கான பணி விதிகள் (Tamil Nadu Municipal Accounts Service Rules) 2016 உருவாக்கப்பட்டு 11.02.2016 அன்று அரசு கெஜட்டில் வெளியிடப்பட்டது என்றும், நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) மேலும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பின் கீழ் பணியிடங்களை புதிதாக உருவாக்க ஏதுவாக செம்பாக்கம், வாலாஜாப்பேட்டை, வந்தவாசி மற்றும் கீழக்கரை நகராட்சிகள் தவிர அனைத்து நகராட்சிகளும் தலா ஒரு இளநிலை உதவியாளர் பணியிடத்தை திரும்ப ஒப்படைத்து (Surrender) தீர்மானம் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்தன என்றும் அத்தீர்மானங்கள் 07.07.2017 அன்று அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) தற்போது தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணியின் (Tamil Nadu Municipal Accounts Service ) கீழ் <u>தேர்வுநிலை நகராட்சிகளுக்கு</u> ஒவ்வொரு நகராட்சிக்கும் கீழ்கண்டவாறு புதிய பணியிடங்கள் உருவாக்கிட திருத்திய கருத்துரு அரசுக்கு 03.01.2019 அன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| நகராட்சி கணக்கு அலுவலர் | Municipal Accounts Officer | 1 |
| கணக்கர் | Accountant | 1 |
| கணக்கு உதவியாளர் | Accounts Assistant | 1 |

மேற்கண்டவாறு Tamil Nadu Municipal Accounts Service பணியமைப்பில் கணக்குப் பணிக்கான பிரத்யேக பணியிடங்களை உருவாக்குவதற்கு ஈடாக ஏற்கனவே தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணியில் (Tamil Nadu Municipal General Service) கணக்கு பணி தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள பணியிடம் / பணியிடங்களையோ அல்லது வேறு பணியிடத்தையோ ஒவ்வொரு நகராட்சியும் கூடுதல் சம்பள செலவினை தவிர்க்கும் பொருட்டு திரும்ப ஒப்படைக்க வேண்டியுள்ளது என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். இந்நகராட்சிகளில் கீழ்காணும் பணியிடத்தினை திரும்ப ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

Class II கணக்கர் பணியிடம் ஒன்று மட்டும்

**<u>அலுவலக குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம் ( ந.க.எண். 2526/2019/சி1) .

2) உள்ளாட்சிகளில் விளம்பரங்கள் / விளம்ப பலகைகள் முறைப்படுத்துதல், நிறுவ அனுமதி வழங்குதல் குறித்து பின்வரும் அரசாணைகள், சட்ட திருத்தங்கள் வெளியிடப்பட்டது. அதனை

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் சுற்றறிக்கை ந.க.எண்.2686/2018/டிபி2, நாள்.14.02.2019–ல் பொருள் குறித்து நகராட்சியில் அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுதல் குறித்த சுற்றறிக்கை அனுப்பப்பட்டது முறையே...

1. உள்ளாட்சிகளில் விளம்பரங்களை முறைப்படுத்துவதற்கான நடைமுறை (Outdoor Advertising Policy) தயாரித்து அரசாணை எண். (4D) 2, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (Mc-1), நாள். 05.06.2018–ல் வெளியிடப்பட்டுள்ளது.
2. மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் உள்ள விளம்பரப் பலகைகளையும், விளம்பரங்களையும் முறைப்படுத்திட சட்டத்திருத்தம் (Act No-. 40/2018) 16.07.2018 அன்று பாகம் 4 பிரிவு 2–ல் வெளியிடப்பட்டுள்ளது.
3. விளம்பரப்பலகைகள் நிறுவ அனுமதி வழங்குவது குறித்து தமிழ்நாடு நகராட்சி சட்டம் (5–வது திருத்தம்) சட்டம் 2018 (தமிழ்நாடு சட்டம் 40/2018) அமலுக்கு கொண்டு வருவது சம்பந்தமாக அரசாணை எண். (MS) 15- ல் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (Mc-1), நாள். 30.01.2019–ல் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
4. அரசாணை எண்17 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2019, தமிழ்நாடு உள்ளாட்சிகள் விளம்பரப்பலகை அனுமதித்தல், வரி விதித்தல் மற்றும் வரி வசூலித்தல் விதிகள் 2003–க்கான விதி திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசிதழில் 31.01.2019 அன்று பாகம் 3 பிரிவு 1 (a) –ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.
5. godp efuhl;rp gFjpfspy; fPo;f;fz;lthW fl;lzq;fs; eph;zak; nra;ayhk;.
   - (i) tpz;zg;gf;fl;lzk; - &.1000/-
   - (ii) tpsk;gu mDkjpf;fl;lzk; :
     1. neLQ;rhiyj;Jiw rhiyf;F 1r.kP - &.6000/-
     2. efuhl;rp rhiy kw;Wk; gpw rhiyf;F 1r.kP - &.4000/-
   - (iii) tUlhe;jpu thlif 1 r.kP - &.2000/-

மேற்கண்ட விளம்பரங்கள் மற்றும் விளம்பரப் பலகைகள் நிறுவ அனுமதி வழங்குதல் தொடர்பான அரசாணைகள், சட்டத்திருத்தங்கள் மற்றும் விளம்பர வரி விதித்தல், விளம்பர வரி வசூல் செய்தல் தொடர்பான அரசாணைகள், சட்டத்திருத்தங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அரசாணைகள் மற்றும் சட்டத்திருத்தில் உள்ளதை உள்ளவாறே நடைமுறைப்படுத்தலாம்.
   (ந.க.எண்.1035/2016/எப்1)

3) தூய்மை இந்தியா திட்டதின் கீழ் பழநி நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்படி 2018-2019–ம் வருடத்திற்கான முதல் கட்ட குப்பைகள் சேகரிப்பு பணிகளுக்காக 37 BOV வாகனங்களும் 7 LCV வாகனங்களும் வாங்கப்பட்டு 26-03-2019 முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்காணும் வாகனங்களில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகள் காரணமாக குப்பை சேகரிக்கும் பணிகள் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, பொது சுகாதார பணிகளில் அவசர அவசியம் கருதி மேற்காணும் வாகனங்களில் அவ்வப்பொழுது ஏற்படும் சிறு சிறு பழுதுகளை மேற்காணும் வாகனங்கள் வாங்கப்பட்ட M/s.Priyam Industrial and Equipments, தாராபுரம் என்ற நிறுவனத்தின் மூலமே வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ளவும் அதற்காக உதிரி பாகங்கள் வாங்கி பயன்படுத்தி கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.2,00,000/–க்கு (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்ய தனி அலுவலர் அவர்களின் கூட்டத்தில் பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2515/2019/எச்2).

4) பொது சுகாதார பிரிவு TN 57 AY 7394, TN 57 AT 6977 மற்றும் TN 57 U 3227 வாகனங்கள் வாங்கப்பட்டது முதல் பேட்டரி மாற்றவில்லை. தற்போது பேட்டரி பழுதடைந்துள்ளதால் பொது சுகாதாரம் அவசியம் அவசரம் கருதி மேற்கண்ட வாகனங்களுக்கு 12 Volt 15 Plate 100Ahms Charger battery 3 எண்ணிக்கை ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் 1 பேட்டரிக்கு 12500 x 3 பேட்டரி = 37,500/– (ரூபாய் முப்பத்து ஏழாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் தனி அலுவலர் அவர்கள் கூட்டத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:-</u>

பொது சுகதாராம் அவசரம் அவசியம் கருதி பொது சுகாதார வாகனங்களுக்கு புதியதாக மூன்று பேட்டரி வாங்க கூட்டப்பொருள் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2513/2019/எச்2).

5) பழநி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN 57 AX 8905 காம்பேக்டர் வாகனம் தகுதிச்சான்று காலம் 04.07.2019–வுடன் முடிவடைவதால் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச்சான்று புதுப்பிக்க மராமத்து பணிகள் மேற்கொண்டு வர்ணம் பூசுவதற்கு அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ. 90,000/– நிர்வாக கட்டணம் ரூ.5,000/– ஆகமொத்தம் ரூ.95,000/– ஐ பொது நிதியிலிருந்து செலவு செய்யவும், பொது சுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் கூட்டத்தின் பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பொது சுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு மராமத்து பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்கள் கூட்டத்தில் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.2514/2019/எச்2)

6) திண்டுக்கல் மாவட்டம், பாராளுமன்ற தேர்தல் 2019–க்கு, தேர்தலை முன்னிட்டு தேர்தல் தொடர்பான விழிப்புணர்வை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகையில் விளம்பரப் பதாதைகள், போஸ்டர்கள் மற்றும் ஸ்டிக்கர்கள் பொது இடங்களில் பொதுமக்கள் பார்வைக்கு நிறுவ தெரிவித்து தமிழக தேர்தல் ஆணையர் கடிதம் எண் 1875/EIE/VII நாள்.21.02.2019–ல் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி செலவினங்கள் மற்றும் இதர செலவினங்களுக்கு உத்தேச செலவினம் ரூ.1,50,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) க்குள் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு. அனுமதிக்கலாம். (ந.க.எண்.115/2019/சி3).

7) இந்நகராட்சிக்கு 2019–20 ஆம் ஆண்டிற்கு அனைத்து பிரிவு அலுவலர்களுக்கும் தேவையான எழுது பொருட்கள், பதிவேடுகள், அனைத்து படிவங்கள் மற்றும் தேவையான அனைத்து பொருள்களையும் அரசுத் துறை சார்ந்த அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு சங்கம் தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்டிகோ சர்வ், திருச்சி அவர்களிடம் வாங்கி கொள்ளவும், அதற்காக ஆகும் தோராய செலவு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

8) இந்நகராட்சியில் பராமரித்துக் கொண்டு இருக்கும் அனைத்து பிரிவு கணினி பிரிண்டர்களுக்கும், டோனர்களுக்கும் மை நிரப்புதல் மற்றும் டிரம்ப் பிளேடு மாற்றிக் கொள்ளுதல் ஆகிய பணிகளை முகில் கம்யூட்டர் நிறுவனம் பழநி அவர்களிடம் செய்து கொள்வதற்கு ஒரு ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை 1.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) இச்செலவினத் தொகை (1.00 இலட்சம்) இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**9)** நகட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் புதிய கடைகள் அமைக்கவும், சிதலமடைந்த நடைபாதையினை சீர்செய்யவும் ஒப்பந்தப்புள்ளி **01.03.2019** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில்,

| வ .எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விவரம் |
|---|---|---|
| 1. | திரு.பி.பழனிச்சாமி,<br>வேலம்பட்டி, பழநி. | 0.49% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2. | **திரு. நா.கருப்புச்சாமி ,**<br>18/32, டி.கே.எண்.புதூர்,<br>ஆயக்குடி (Po),<br>பழநி (Tk). | 0.20% மதிப்பீட்டிற்கு குறைவு |

எனவே மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் **திரு. நா.கருப்புச்சாமி**, அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு :

1) மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்
2) ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் அனுமதிக்கலாம்.

**10)** பழநி நகட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் உள்ள கடைகளின் மேற்கூரை பழுதானதை பழுது நீக்கம் செய்யும் பொருட்டு (Surki, tiles) மேற்கூறைத்தட்டு ஓடுகள் பதிக்கும் பணிக்கு பொது நிதி **2019–2020**–ன் கீழ் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.**9.80** இலட்சத்திற்கு மேற்கொள்ள தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி அளித்ததின் பேரில் **19.06.2019** –ம் தேதியன்று ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு,

| வ .எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விவரம் |
|---|---|---|
| 1. | திரு.பி.பழனிச்சாமி,<br>வேலம்பட்டி, பழநி. | 2.50 % மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2. | **திரு. நா.கருப்புச்சாமி ,**<br>18/32, டி.கே.எண்.புதூர்,<br>ஆயக்குடி (Po),<br>பழநி (Tk). | 1.50% மதிப்பீட்டிற்கு குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்2–ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் **திரு.நா.கருப்புச்சாமி**, என்பவர் 1.50 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளார். எனவே அன்னாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு :

1) வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள **திரு.நா.கருப்புச்சாமி**, 1.50 % ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை ஏற்கலாம்.

11) பழநி நகராட்சிக்கு (JICA) ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதியில் (2011–2012) ரூ.2160 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் செய்து முடிவடையும் தருவாயில் உள்ளது. இத்திட்டத்தில் கீழ்கண்ட விபரப்படி நிதி ஒதுக்கீடு மற்றும் கடன், மானியம், நகராட்சி பங்குத் தொகை ஆகியவை விபரம்,

| வ.எண் | விபரம் | தொகை இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | TNUDF (Lone) கடன் | 1296.00 |
| 2. | JICA (Grant Fund) மானியம் | 648.00 |
| 3. | Municipality Share Amount (நகராட்சி பங்குத் தொகை) | 216.00 |
| | மொத்தம் | 2160.00 |

இத்திட்டத்தில் TNUIFSL நிறுவனத்திலிருந்து கடன் மற்றும் மானியம் வரப்பெற்றுள்ளது, மேலும் பழநி நகராட்சிக்கு கீழ்கண்ட விபரப்படி கடன் மற்றும் மானியமாக ரூ.235.00 இலட்சம் வரவேண்டி உள்ளது.

| வ.எண் | விபரம் | வரப்பெற்ற தொகை இலட்சத்தில் ரூ | வர வேண்டிய தொகை இலட்சத்தில் ரூ |
|---|---|---|---|
| 1. | TNUDF (Lone) கடன் | 1140.00 | 156.00 |
| 2. | JICA (Grant Fund) மாணியம் | 569.00 | 79.00 |
| 3. | Municipality Share Amount (நகராட்சி பங்குத் தொகை) | 216.00 | 0 |
| | மொத்தம் | 1925.00 | 235.00 |

மேலும் ஏற்கனவே TNUIFSL நிறுவனத்துடன் செய்து கொண்ட கடன் ஒப்பந்தம் 31/03/2018–உடன் முடிவடைந்துவிட்டது. தொடர்ந்து மீதி கடன் மற்றும் மானியத்தொகையினை பெற கடன் ஒப்பந்தத்திதனை கால நீட்டிப்பு செய்ய மன்றத்தீர்மானம் இயற்றி கடன் ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து பின் தொகை பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்க கோரப்பட்டுள்ளது. எனவே கடன் ஒப்பந்தக்கால நீட்டிப்பு செய்து பின்னர் உரிய கடன்/மானியத் தொகையினை விடுவிக்க TNUIFSL நிறுவனத்தை கேட்டுக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

கடன் ஒப்பந்தத்தினை நீட்டிப்பு செய்து உரிய தொகை விடுவிப்பு செய்ய கேட்டுபெற மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண். 4353 /2007/இ2).

12) பழநி நகராட்சிக்குட்பட்ட வ.உ.சி பேருந்து நிலையத்தில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு மாவு அரைப்பதற்கு புதிய மாவு அரைக்கும் இயந்திரம் (கிரைண்டர்), ஏற்கனவே உள்ள இயந்திரத்தின் பிளைடு சரி செய்தல், கேஸ் அடுப்பில் உள்ள பர்னர் புதிதாக பொருத்துதல், ஸ்டீமரின் வழியாக நீராவி வரும் குழாய்கள் துரு பிடித்து பழுதாகி உள்ளதை சீர் செய்தல் மற்றும் அம்மா உணவகத்தின் வாசலில் இரவு நேரங்களில் மது அருந்திவிட்டு உறங்குகிறார்கள் ஆகையால் வாசலைச் சுற்றியும் கம்பி வேலிகேட் அமைத்துக் கொடுப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,10,000/–க்கு நிர்வாக அனுமதி மற்றும் செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றப்பொருள்வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.914/2019/இ1).**

13) பழநி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 17 முதல் 33 வார்டு வரையிலான வார்டுகளில் உள்ள ஆழ்துளை கிணறு மற்றும் சிறுமின் விசைபம்புகள் மேற்படி வார்டுகளில் உள்ளது பயன்பாடு மிகவும் அதிகமாக உள்ளதால் அடிக்கடி மின்விசை பம்பு பழுது ஏற்படுகிறது. மேலும் வருமை கோட்டிற்கு கீழ் உள்ள பகுதியானதாலும் மக்கள் அதிகமாக கூடுகின்ற இடமாக உள்ளதாலும் தேவைகளும் அதிகமாக இருப்பதால் மின்விசைப் பம்புகளின் இயக்கம் அதிகமாக உள்ளது எனவே அதனை சரி செய்யவும் பழுது நீக்கம் செய்யவும் நகராட்சியில் போதிய ஆட்கள் இல்லாததால் பராமரிப்பு பணி ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள ரூ.9.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டதற்கு நிர்வாகஅனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

4) பழநி நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் உள்ள கடைகளில் மேற்கூரையின் தளம் சேதமடைந்துள்ளது, அதனை சுருக்கி, டைல்ஸ் ஆகியவை சிதலமடைந்து கடைகளுக்குள் தண்ணீர் கசிவு ஏற்படுகிறது. எனவே மேற்கூரை அமைக்க வேண்டிய அவசியம் உள்ளது என்றும் அதனடிப்படையில் அதன் உத்தேச செலவினம் ரூ.9.80 இலட்சத்திற்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண். /2019/இ1).

15) பழநி நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் பகிர்மான குழாய், பிரதான குழாய் மற்றும் கோடைகால நீர்தேக்க தொட்டி, பாலாறு டேம் ஆகிய இடங்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய போதிய உபகரணங்கள் இல்லை எனவே அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சீர்செய்யவும், குடிநீரை சீராக விநியோகம் செய்ய பொருட்கள் வாங்க மதிப்பீடு ரூ.9,50,000/– இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

16) பழநி நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கு பெரியப்பா நகர், சர்வே எண்.1/2,3,4,3/2–ல் அமைந்துள்ளது. தினந்தோறும் நாள் ஒன்றுக்கு 3 டன் பிளாஸ்டிக் நெகிலி மற்றும் நாப்கின் தினமும் சேகரம் செய்யப்படுகிறது என பொது சுகாதார பிரிவிலிருந்து தெரிவிக்கப்படுகிறது, தினமும் கையாளப்படுகிறது எனவே அதனை சுற்று சூழல் கெடாதவாறு நாப்கின், நெகிலி எரியூட்டும் இயந்திரம் (Napkin Incinerator) 1 வாங்குவதற்கு செலவினம் ரூ.2.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது அதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

17) பழநி நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் உள்ள கடைகளில் மேற்கூரையின் தளம் சேதமடைந்துள்ளது, அதனை சுருக்கி, டைல்ஸ் ஆகியவை சிதலமடைந்து கடைகளுக்குள் தண்ணீர் கசிவு ஏற்படுகிறது. எனவே மேற்கூரை அமைக்க வேண்டிய அவசியம் உள்ளது என்றும் அதனடிப்படையில் அதன் உத்தேச செலவினம் ரூ.9.80 இலட்சத்திற்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.(ந.க.எண். /2019/இ1).

18) பழநி நகராட்சில் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள வடக்கு பகுதியில் தாய்மார்கள் பாலூட்டும் அறையின் முன்பாக நகராட்சிக்கு சொந்தமான வாகனங்கள் (LCV) நிறுத்துவதற்கு ஒரு ஷெட் அமைக்கவும் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர், பழநி பேருந்துநிலையத்தில் அனுமதி வழங்க நேரில் ஆய்வு செய்து ஆய்வின் போது பேருந்து ஓட்டுனர்கள் ஓய்வு எடுப்பதற்கு அறை ஒன்று அமைத்து கொடுக்க அறிவுறுத்தப்பட்டது. மேலும் கனரா வங்கி மூலம் சி.எஸ்.ஆர் நிதியில் வழங்கப்பட்ட சிறுநீர் கழிப்பிடங்கள் 3 பேருந்து நிலையத்தில் நிறுவவும் புதிதாக ஆழ்துளை அமைத்து தண்ணீர் வசதி ஏற்படுத்தவும் மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண். /2019/இ1).

19) பழநி நகராட்சிக்குட்பட்ட அடிவாரம் ஆண்டவன் பூங்கா ரோட்டில் அமைந்துள்ள பொதுக் கழிவறையில் பக்தர்கள் வசதிக்காக சில அபிவிருத்திப் பணிகள் மற்றும் மராமத்துப் பணிகள் மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது அதனடிப்படையில் அதன் உத்தேச செலவினம் ரூ.1.80 இலட்சத்திற்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.(ந.க.எண். /2019/இ1).

20) பழநி நகராட்சியில், குடிநீர் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள அரசாணை எண். GO(MS).72 MAWS (MA2) Department, நாள். 16/07/2018–ல் கீழ்க்கண்ட விபரப்படி அனுமதி அளித்து ஜெர்மன் நிறுவன (Kfw assisted SMIF–TN–II-2) திட்டத்தில் ரூ.15.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி 06/06/2019–ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணி துவக்கப்பட்டுள்ளது. இப்பணியின் தரம் குறித்து மூன்றாம் நபர் ஆய்வு அவ்வப்போது மேற்கொண்டு உரிய ஆலோசனை வழங்க அண்ணா பல்கலைக்கழகம், திண்டுக்கல் கிளையினை அமர்த்தி மேற்கொண்டு பணியினை தரமானதாக மேற்கொள்ளவும், மூன்றாம் நபர் ஆய்வு செய்து அவ்வப்போது அதற்கான ஆய்வு அறிக்கை பெறவும் அதற்கு உண்டான தொகையினை செலுத்த நகராட்சி குடிநீர் நிதியில் செலவினத்தை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு :
1) (Kfw assisted SMIF–TN–II-2) குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணியினை மூன்றாம் நபர் ஆய்வு பணிகள் மேற்கொள்ள அண்ணா பல்கலைக்கழகம், திண்டுக்கல் கிளையினை அமர்த்தலாம்.
2) ஆய்வு மேற்கொள்ள ஆகும் செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

21) பழநி நகராட்சிக்கு சொந்தமான திண்டுக்கல் தொட்டியில் அமைந்துள்ள மேல்நிலை தொட்டியிலிருந்து 40 எச்.பி. மின் மோட்டார் மூலம் நீர் உந்தப்பட்டு இலட்சுமிபுரம் மேல்நிலைத் தொட்டிக்கு நீர் சேகரம் செய்து பின்னர் பகிர்மான குழாய் மூலம் நீர் விநியோகம் செய்யப்படுகிறது எனவே 40 எச்.பி மின் மோட்டார் அடிக்கடி பழுது ஏற்பட்டு விநியோகம் செய்ய முடியாமல் உள்ளது மேலும் 40 எச்.பி மின்மோட்டார் மிகவும் பழமையானது எனவே இரண்டு 40 எச்.பி மின்மோட்டார் வாங்க அவசியமாகிறது எனவே 2 புதிய 40 எச்.பி மின்மோட்டார் மதிப்பீடு ரூ.4,50,000/– க்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு :
1) அவசர அவசியம் கருதி மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

22) பழநி நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 33 வார்டுகளில் உள்ள பகிர்மான குழாய்களில் அவ்வப்போது எற்படும் கசிவுகளை சரி செய்ய போதிய பொருட்கள் நகராட்சி இருப்பில் இல்லாத காரணத்தால் பழுது நீக்கம் செய்ய மிகவும் சிரமம்பட்டு வருகிறார்கள், எனவே உடனடியாக கீழ்கண்ட பொருட்கள் வாங்குவதற்க்கு அறிவுறுத்தப்பட்டது அதனடிப்படையில் உத்தேச செலவினம் ரூ.24.50 இலட்சத்திற்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு :
1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

23) பழநி நகராட்சிக்குட்பட்ட மதினா நகர், பட்டத்துவிநாயகர் கோவில் தெரு மற்றும் திலகர் வீதியில் உள்ள சிறுமின் விசை பம்பு சிறு சிறு பழுதுகளால் இயக்க முடியாமல் உள்ளது, அதனை இயக்க கோரி மக்கள் புகார் அளித்த வண்ணம் உள்ளனர். எனவே மேற்காணும் மூன்று இடங்களில் சின்டெக்ஸ் டேங், திட்டு அமைத்து மற்றும் பழுது நீக்கம் செய்ய பொருட்கள் நகராட்சி இருப்பில் இல்லாததால் மேற்காணும் இடத்தில் மின்பவர் பம்பு சரி செய்ய மதிப்பீடு ரூ.1.30 இலட்சத்திற்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு :
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

24) தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் – 2019, அரசாணை நிலை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA1) நாள். 04.02.2019–ல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டு அதனை தமிழ்நாடு அரசிதழில், அரசிதழ் எண்.43, பகுதி 111, பிரிவு 1 (a), நாள்.04.02.2019–ல் வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணை மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன் உள்ளாட்சிகளின் திட்ட அனுமதி கட்டிட அனுமதி குறித்த நடைமுறைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு :
1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அரசாணைapd;gb உள்ளதை உள்ளவாறே நடைமுறைப்படுத்தலாம். (ந.க.எண்.1006/2019/எப்.1)

25) பழநி நகராட்சிக்கு சொந்தமான பேருந்துநிலையத்தில் இரண்டு இலவச கழிவறைகள் மற்றும் இரண்டு கட்டண கழிவறைகள் உள்ளது, தற்போது சுற்றுலா தளமாகவும், பக்தர்கள் அதிகம் வரக்கூடிய பகுதி ஆதலால் அனைத்து கழிவறைகளையும் தரம் உயர்த்தும் வகையில் சீர் செய்யமாவட்ட ஆட்சியர் மற்றும் ஆணையாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டதன்அடிப்படையில் உத்தேச செலவினம் ரூ.13.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது அதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு :
1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

26) பழநி நகராட்சிக்கு சொந்தமான சிவகிரிப்பட்டியில் உள்ள தரைமட்ட தொட்டியில் நீர் நிரப்பப்பட்டு அதனை மோட்டார் உதவியுடன் மேல் நிலைத் தொட்டிக்கு உந்தப்பட்டு நீர் சேகரம் செய்யப்பட்டு நீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது, தற்போது தரைமட்ட தொட்டியில் உள்ள 20 எச்.பி மின்மோட்டார் மிகவும் பழமையானது அடிக்கடி பழுது ஏற்பட்ட வண்ணம் உள்ளது எனவே 2 எண்ணம் புதிய 20 எச்.பி மின்மோட்டார் வாங்க ஆணையாளர் மற்றும் பொறியாளரால் அறிவுறுத்தப்பட்டது அதனடிப்படையில் உத்தேச செலவினம் ரூ. 2.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

27) பழனி நகராட்சிக்கு சொந்தமான TN57Z3464 குடிநீர் விநியோக பணி வாகனம் எண் வருடாந்திர தகுதி சான்று சம்மந்தமாக சில மராமத்துப் பணி பார்பதற்கு 27.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில்,

| வ எண் | விலைப்புள்ளிவிபரம் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | J.D & Co., 160, கோவை ரோடு, பொள்ளாச்சி. | 82500/- |
| 2 | P.B ஷெரிப் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், பொள்ளாச்சி | 92000/- |

வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள J.D & Co., பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**அலுவலகக்குறிப்பு :**

1)குறைவாக கொடுக்கப்பட்டுள்ள விலைப்புள்ளியினை வழங்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம். (ந.க.எண் 1633/2019/இ2).

28) பழநி நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2014-2015-ன்கீழ் ரூ.485.50 இலட்சத்தில் 14 பனிகள் எடுக்கப்பட்டு பணி துவக்க 2015-ல் வேலை உத்திரவு வழங்கி 60 நாட்களில் முடிக்க உத்திரவு வழங்கிய நிலையில் உரக்கிடங்கு அருகில் உள்ள பெரியப்பா நகர் பகுதி மக்கள் நல சங்கம் பசுமை தீர்பாயத்தில் வழக்கு தொடர்ந்ததால் பணிகள் அணைத்தும் நிறுத்தப்பட்டு பசுமை தீர்ப்பாய தீர்ப்பு 14/07/2017-ல் நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு பெறப்பட்டபின் பணிகள் துவக்கப்பட்டு ஒன்பது பணிகள் முடிக்கப்பட்டுள்ளது, கீழ்காணும் பணி தற்போது வரை துவக்கப்படாமல் உள்ளது.

| வ.எண் | வேலையின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | இரத்து செய்யப்படும் பனியின் பட்டியல் தொகை மற்றும் மீதத் தொகை (ரூ.இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|
| | | | பட்டியல் தொகை | மீதத் தொகை |
| 1. | Construction of Vechicle shed at Compost yard | ரூ.25.00 | - | ரூ.25.00 |
| | **Total** | **ரூ.25.00** | **-** | **ரூ.25.00** |

மேற்காணும் பணியின் ஒப்பந்ததாரர் திரு.T.ராஜு என்பவருக்கு பல அறிவிப்புகள், அனுப்பியும் பணிகளை தொடராமல் நிறுத்தி உள்ளார்கள் தொடர்ந்து பணி செய்யாமல் இருந்ததாலும் கடந்த 12/11/2018 -ம் நாள் நகராட்சி நிர்வாக ஆனையர் ஆய்வுக் கூட்டத்தில் வழங்கிய அறிவுறையின்படியும், இவ்வலுவலக இறுதி அறிவிப்பு 21/06/2019-ல் வழங்கப்பட்டது. ஆனால் இதுநாள் வரையில் ஒப்பந்ததாரரிடம் இருந்து எவ்வித அறிக்கையும் கிடைக்கப்பெறவில்லை எனவே வேலை உத்திரவு 27/01/2015-ல் வழங்கப்பட்டு 4 வருடகாலத்திற்கும் மேற்பட்டுவிட்டது. மேற்கொண்டு இவ்ஒப்பந்ததாரர் இப்பணியினை செய்ய இயலாததாலும், செய்து முடிப்பார் என்பதர்குரிய நம்பிக்கை இல்லை. எனவே இப்பணியினை இரத்து செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) வேலை உத்திரவை ரத்து செய்யலாம்.

2)ஒப்பந்ததாரர் இப்பணிக்காக செலுத்திய முன்வைப்புத் தொகை, நிறுத்தி வைப்புத் தொகை ஆகியவை பறிமுதல் செய்யலாம். பறிமுதல் செய்து நகராட்சி கணக்கில் வரவுவைக்க அனுமதிக்கலாம்.

29) பழநி நகராட்சிக்குட்பட்ட தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.383 நாள்.22.02.2018 அன்று நிர்வாக அனுமதி வழங்கியதின் பேரில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரோரனை அனுப்பப்பட்டு தலைமை பொறியாளர் அவர்களது கடித ந.க.எண்.13899/2016/Do1, நாள்.09.03.2018—ல் பணி மேற்கொள்ள ஓராண்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு 21.03.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு M/s. மாருதி டிரேடிங் கார்ப்பரேசன், 674, மதுரை ரோடு, தேனி அவர்களுக்கு பணி கொடுக்கப்பட்டு தற்போது வரை பராமரிப்பு பணி நல்லமுறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒப்பந்ததாரர் ஒப்பந்தகாலம் 31.03.2019 வரை ஓராண்டு நிறைவடைவதால் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அனுமதிக்காக பிரேரனை அனுப்பப்பட்டுள்ளது. அனுமதி பெறப்படும் வரை அவரையே நீட்டிப்பு செய்து 31/06/2019 வரை மூன்று மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்து வேலை உத்திரவு வழங்கப்பட்ட நிலையில் மூன்று மாத காலமும் முடிவடைந்ததால் மேலும் தலைமைப் பொறியாளர் அவர்களின் அனுமதி இதுநாள் வரை வரப்பெறவில்லை எனவே அனுமதி வரப்பெறும் வரை ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரை அதே பழைய ஒப்பந்த விலை விகிதத்தில் பராமரிப்பு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. M/s. மாருதி டிரேடிங் கார்ப்பரேசன், 674, மதுரை ரோடு, தேனி அவர்கள் நல்ல முறையில் பராமரிப்பு செய்வதால் அவரையே ஏற்கனவே நடப்பில் உள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகித்திற்கு நீட்டிப்பு செய்யலாம்.
2. ESSCO-II மின்கலம் சேமிப்பு விளக்கு அமைக்க பூர்வாங்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டு முடியும் தருவாயில் உள்ளதால் மின் சேமிப்பு LED விளக்கு வரும் வரை நீட்டிப்பு செய்யலாம்.
3. தலைமை பொறியாளரிடமிருந்து உரிய உத்தரவு வரும் வரை தொடர்ந்து மேற்படி நிறுவனமே ஒப்பந்த விலை விகிதத்திற்கே நீட்டிப்பு செய்யலாம்.
4. செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண். 85/2015/இ2)

30) பழநி நகராட்சிக்கு சொந்தமான பாலாறு மற்றும் கோடைகால நீர்தேக்கத்திலிருந்து அங்குள்ள நீர் வடிப்பான்கள் ( Slow sand filter, Rabid Sand filter) இடமிருந்து நீர் சுத்திகரிக்கப்பட்டு பிறகு தேவையான அளவு கேஸ் குளோரின் கலக்கப்பட்டு அங்கிருந்து மக்களுக்கு தேவையான சுத்தமான குடிநீர் உயர்மட்ட தொட்டிகளுக்கு அனுப்பப்பட்டு பிறகு அங்கிருந்து பகிர்மான குழாய் மூலம் மக்களுக்கு சுத்தமான பாதுகாப்பான குடிநீர் செல்கிறது எனவே அன்றாடம் பயன்படுத்தப்பட்டுவரும் கேஸ் குளோரின் சிலிண்டர் வாங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ. 7.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் 07.03.2019 —ம் நாளன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விவரம் |
|---|---|---|
| 1. | M/S. People Chemical Industries, 4/497, Asaripatty Main Road, Aundipatty. | 0.60% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2. | M/S. Shri Sathiya Dyes and Chemicals, Andipatty, Theni. | 0.20% மதிப்பீட்டிற்கு குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.20% மதிப்பீட்டிற்கு குறைவு ஒப்பந்தப்புள்ளி வழங்கி உள்ள M/S. Shri Sathiya Dyes and Chemicals, Theni நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண். 4353 /2007/இ2).**

31) பழநி நகராட்சிக்கு சொந்தமான பாலாறு அணை மற்றும் புளியமரத்து செட் ஆகிய இடங்களில் உள்ள Rabit Sand filter, Slow Sand Filter ஆகியவற்றில் நீரை சுத்திகரிப்பு செய்து தேவையான அளவு குளோரின் கலக்கப்பட்டு பிரதான குழாய்களின் வழியே உயர்மட்ட தொட்டி, தரைமட்ட தொட்டிகளுக்கு சென்று அங்கிருந்து 33 வார்டுகளுக்கும் குடிநீர் சீராக விநியோகம் செய்யப்படுகிறது.

தற்போது இரண்டு இடங்களிலும் தினந்தோரும் பயன்படுத்தப்படும் Gas Clorine cyclinder, பாலாறு மற்றும் கோடைகால நீர்தேக்கம் ஆகியவற்றிற்கு தேவைப்படும் 62 எண்ணம் cyclinder (ஓராண்டுக்கு) தேவையானதை வாங்கிக்கொள்ள உத்தேச செலவினம் ரூ.9.50 மதிப்பீடு தயார் செய்யப்பட்டதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

32) பழநி நகராட்சிக்கு சொந்தமான மின்விசைப்பம்புகளில் அவ்வவ்போது எற்படும் பழுதுகள் பழுது நீக்கம் செய்ய 20 எண்ணம் 2000 லிட்டர் HDPE டேங், பேனல் போர்டு 18 எண்ணம் மற்றும் மின்மோட்டார் 18 எண்ணம் விநியோகம் செய்யும் பணிக்கு தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி அளித்ததின்பேரில் பேரில் 04–06–2019–ம் தேதியன்று ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்ண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு,

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விவரம் |
|---|---|---|
| 1. | **திரு.N.கருப்புச்சாமி**<br>18/32,T.K.N.புதுார்,ஆயக்குடி(PO),<br>பழனி(TK). | 0.10% மதிப்பீட்டிற்கு குறைவு. |
| 2. | M/s சரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ்,<br>153, லட்சுமி புரம், பழனி. | 1.50 % மதிப்பீட்டிற்கு அதிகம்.10 |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்1–ல் கண்டுள்ள ஒப்பந்ததாரா் திரு. **N.கருப்புச்சாமி,** என்பவா் 0.10 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளாா். எனவே அன்னாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பாா்வைக்கும் முடிவிற்கும்.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள திரு. **N.கருப்புச்சாமி,** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை ஏற்கலாம்.

33) பழநி நகராட்சிக்குட்பட்ட சண்முகபுரம் நடுநிலைப்பள்ளி மராமத்துப் செய்யும் பணிக்கு 07/03/2019 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகான ஒப்புநோக்கு மேற்க்கொள்ளப்பட்டதில்,

| வ .எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விவரம் |
|---|---|---|
| 1. | **திரு .சு.தங்கராஜ்**<br>201 (1), பாட்டாளி தெரு கிழக்கு,<br>அடிவாரம், பழநி. | 0.15ரூ மதிப்பீட்டிற்கு குறைவு |
| 2. | **திரு. ரவிச்சந்திரன்,**<br>நகராட்சி ஒப்பந்ததாரர், | 0.72ரூ மதிப்பீட்டிற்கு அதிகம். |

மேற்கண்டுள்ளவாறு வரிசை எண்.1–ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள் **திரு.சு.தங்கராஜ்,** அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு :

1) ஒப்பந்தப்புள்ளி கோரியதை ஏற்கலாம்
2) குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

34) பழனி நகராட்சியில் பங்குனி உத்திர திருவிழாவினை முன்னிட்டு கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, 05–02–2019 ல் நிர்வாக அனுமதி அளித்ததின் பேரில் குடிநீர் நிதி 2018–2019–ன் கீழ் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மேற்கொள்ள 07–03–2019–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு,

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விவரம் |
|---|---|---|
| 1 | திரு. R. செல்லத்துரை, த/பெ. ராமசாமி கவுண்டர், அன்னமார் கோவில் தெரு, அமரபூண்டி, பழநி | 0.25 சதவீதம் குறைவு<br>முன் வைப்புத் தொகை ரூ.2500/–<br>சலான் எண்.080/1/1/18–19/0019667,<br>நாள்.07–03–2019 |
| 2 | **திரு.K. பொன்னுச்சாமி**<br>த/பெ.கூடலிங்கம்,<br>ஆத்திக்காட்டு தோட்டம்,<br>அப்பனூத்து அஞ்சல், ஒட்டன்சத்திரம் (வட்டம்),<br>திண்டுக்கல் மாவட்டம் – 624 617 | 0.25 சதவீதம் அதிகம்<br>முன் வைப்புத் தொகை ரூ.2500/–<br>சலான் எண்.080/1/1/18–19/0019668,<br>நாள்.07–03–2019 |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண்.1ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் திரு. R. செல்லத்துறை, **என்பவர் 0.25** சதவீதம் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளார். எனவே அன்னாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
2) வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **0.25** % குறைவாக கொடுத்துள்ள திரு. **R. செல்லத்துரை,** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். ( 812/2019/இ2).

நகராட்சி அலுவலகம், பழனி.
நாள். 26–06–2019

தனி அலுவலர்
பழனி நகராட்சி.